# மூவொரு கடவுள் பெருவிழா

## மூன்றாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்புமிக்கவர்களே! கத்தோலிக்கத் திருஅவையின் மறையுண்மையாக விளங்குவது தந்தை, மகன், தூய ஆவி என்னும் மூவொரு இறைவன். உலக அறிவைக் கடந்த, வார்த்தைகளால் விளக்க முடியாத, மனித வாழ்வின் தொடக்கமும், முடிவுமான மூவொரு இறைவன் என்னும் நம்பிக்கை.

கடவுள் ஒருவரே. அவர் எப்படி மூன்று ஆட்களாய் இருக்கக் கூடும்? என்ற கேள்வி நமக்குள் எழத்தான் செய்யும். மூவொரு கடவுளைக் குறித்து கிறிஸ்து நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். மூன்று ஆட்களுக்கும் அன்புதான் அடிப்படை. "நான் தந்தையிடம் செல்வேன். நான் தந்தையிடம் சென்றால்தான் துணையாளராகிய தூய ஆவியை உங்களுக்கு அனுப்ப முடியும்" என்று கூறிய இயேசு, "அத்தூய ஆவியார் நிறை உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்" என்கிறார். தந்தை மகனை அன்பு செய்கிறார். மகன் தந்தையை அன்பு செய்கிறார். இருவரிடம் இருந்தும் அன்பாக, ஆற்றலாக தூய ஆவி புறப்பட்டு வருகிறார். மூன்று ஆட்களுக்கும் ஒரே ஞானம், ஒரே சித்தம், ஒரே வல்லமை, ஒரே ஒன்றிப்பு அமைகிறது. மூன்று ஆட்களாக இருக்கும் நிலையிலும் எந்த ஆளும் தனித்து செயல்படுவதில்லை. மூன்று ஆட்களும் இணைந்து செயல்படுகின்றனர். தந்தை, மகன், தூய ஆவி என்னும் மூவொரு இறைவன் நம்முள் இருந்து செயல்பட்டு நமது பகை, பொறாமை, அன்பற்ற தன்மை ஆகியவற்றை நீக்கி, அன்புறவில் வாழத் தேவையான வரங்களைத் தந்திடுமாறு வேண்டி இப்பலியில் இணைவோம்.

### முதல் வாசக முன்னுரை: நீதிமொழிகள் 8: 22-31

உலகம் தோன்றுவதற்கு முன்பே ஞானம் இவ்வுலகில் கடவுளோடு செயல்பட்டதாக ஞானம் தனக்குத்தானே பேசிக் கொள்வதே இன்றைய முதல் வாசகம். கடவுளோடு இருந்து செயலாற்றிய ஞானம் மனித இனத்தோடு இருப்பதாகவும் பதிவு செய்யப்படுகிறது. விவிலிய மாந்தர்களை நமக்கு அடையாளப்படுத்துவது அவர்கள் பெற்றிருந்த ஞானத்தினாலேதான். நாமும் அத்தகைய ஞானத்தைப் பெற்றுக் கொள்ள முதல் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை: உரோமையர் 5: 1-5

நம்பிக்கையின் மூலமாக நாம் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக முடியும். இந்த நம்பிக்கையால் இறுதி நியாயத் தீர்ப்பின் போது எல்லோரையும் அன்பால் ஈர்த்துக் கொள்வேன் என்றும் நமக்கு ஒரு துணையாளரை அனுப்புவேன்; அவர் நிறைவாழ்வை நோக்கி உங்களை அழைத்துச் செல்வார் என்ற கிறிஸ்துவின் வெளிப்பாடுகளைத் தூய ஆவியின் வழியாகப் பெற்றுக் கொள்ள அழைப்பு விடுக்கும் இரண்டாம் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நிறை உண்மையை நோக்கி எங்களை வழிநடத்தத் துணையாளரைத் தந்தவரே எம் இறைவா!

திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், இருபால் துறவியர் அனைவரும் மூவொரு கடவுளின் அடையாளமாகவும் சமத்துவத்தின் சங்கமமாகத் திகழவும் தேவையான ஆற்றலை நிறைவாகப் பொழிந்திட வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அருளிலும், அன்பிலும், நட்புறவிலும் இணைந்திருக்கும் எம் இறைவா!

எங்கள் குடும்பங்களில் இறையருளின் துணையோடு, இறையனுபவத்தைப் பெற்றிட, ஒற்றுமையுடன் வாழ்ந்திடவும், உண்மையான கிறித்தவர்களாக எப்போதும் கடவுளோடும் பிறரோடும் உறவுடன் வாழத் தேவையான வரங்களைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. திருமுழுக்கின் வழியாக மூவொரு இறைவனின் தெய்வீகத்தில் எங்களை பங்கு கொள்ளச் செய்த எம் இறைவா!

நாங்கள் அடுத்திருப்பவரிடம் அன்பும், சுயநலமில்லாத சேவை மனப்பான்மை கொண்டவர்களாகவும், உலகெங்கும் அன்பின் சாட்சிகளாய் வலம்வர உமது அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. உலகம் முடியும் வரை எத்தாரும் உங்களோடு இருப்பேன் என்றுரைத்து எங்களைத் தேற்றும் எம் இறைவா!

உமது வார்த்தையாலும் உணவாலும் ஊட்டம் பெற்ற நாங்கள் எப்பொழுதும் உமக்கு உகந்தவற்றையே நாடவும், நாங்கள் பெற்றுக் கொண்ட அழைப்பு நிலையில் எங்களை ஏற்றுக் கொண்டு தேவையில் இருப்போருக்கு உதவி செய்து வாழ்ந்திடவும், எங்கள் பணிகளால் உம் பணி செய்திடும் வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : ஆசிரியை திருமதி. ஞா.சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com